# உள்ளூராட்சித் திருத்தச் சட்டமூலம் அரசியல் யாப்புக்கு முரணானது!

## உயர்நீதிமன்றம் அதிரடி அறிவிப்பு

கொழும்பு, ஒக். 08

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பிரதேச சபைகள், நகர, மாநகர சபைகள் மற்றும் மாகாண சபைகள் தொடர்பான திருத்தச் சட்டமூலம் அரசியல் யாப்புக்கு முரணானது என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

உயர்நீதிமன்றின் இந்த வியாக்கியானத்தைச் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன இன்று நாடாளுமன்றத்தில் வைத்து அறிவித்தார்.

குறித்த திருத்தங்களை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றில் விசேட பெரும்பான்மை அல்லது சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என்றும் உயர் நீதிமன்றத்தின் வியாக்கியனத்தில் சொல்லப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தச் சட்டமூலத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (03, க)


மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 21 செவ்வாய்க்கிழமை 08.08.2023 கதிர் 45



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


## இன்சுலின் கையிருப்பு போதியளவு உள்ளது! லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலை பணிப்பாளர்

கொழும்பு, ஒக். 08

லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் இன்சுலின் இல்லை என வெளியான தகவல் பொய்யானது எனவும் சிறுவர்களுக்குத் தேவையான இன்சுலின் போதியளவு உள்ளதாகவும் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஜி.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

இன்று காலை ஊடகங்களுக்கு விசேட அறிக்கையொன்றை வெளியிட்டபோதே அவர், இதனை உறுதிப்படுத்தினார்.

தங்கள் வைத்தியசாலையில் தேவையான அளவு இன்சுலின் உள்ளது எனவும் கிளினிக்குகளுக்கு வரும் சிறுவர்களுக்கும் வழங்கக்கூடிய அளவில் போதுமான இன்சுலின் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் உள்ள எந்த ஒரு வைத்தியசாலைக்கும் இன்சுலின் தேவை இருந்தால், அதை வழங்கக் கூடிய திறனும் தங்களிடம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, உங்கள் குழந்தைக்கு இன்சுலின் கொடுக்கும் தேவையிருந்தால் எவ்விதத் தயக்கமும் இன்றி வைத்தியசாலைக்குச் செல்லுங்கள், என அவர் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார். (த)

## பிரித்தானியாவில் பரவும் கொவிட் திரிபு - எரிஸ்! இலங்கையும் அவதானம்

பிரித்தானியாவில் வேகமாகப் பரவிவரும் கொவிட் - 19 இன் திரிபு வடிவமான "எரிஸ்" தொடர்பாக இலங்கையும் அவதானத்தோடு இருப்பதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒமிக்ரோன், எரிஸ், ஈஜி.5.1 ஆகிய கொவிட் திரிபுகள் ஜூலை 31 இல் தீவிரமாக பிரித்தானியாவில் பரவ ஆரம்பித்திருப்பதாக எச்சரிக்கப்பட்டிருந்தது. தற்போது அங்கு அடையாளப்படுத்தப்படும் பத்தில் ஒரு கொவிட் தொற்றாளருக்கு இந்தத் திரிபுகள்

2➤

## கந்தானை இரசாயனத் தொழிற்சாலையில் தீ விபத்து ஒருவர் மரணம்! 60 மாணவர்கள் சிகிச்சைக்கு அனுமதி

கந்தானையில் உள்ள இரசாயனத் தொழிற்சாலையில் இன்று காலை ஏற்பட்ட தீ விபத்தினால் கணேமுல்லையில் வசிக்கும் 50 வயதுடைய தொழிற்சாலையின் கணக்காளர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் நச்சுப் புகையை சுவாசித்த 60 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த தீயினால் தொழிற்சாலைக்கு அருகாமையில் உள்ள ஒரு பெரிய பகுதியில் புகை பரவியதால், அருகிலுள்ள மூன்று பாடசாலைகளைச் சேர்ந்த பெருந் தொகையான மாணவர்கள் புகை யைச் சுவாசித்ததால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புனித செபஸ்தியான் பாலிகா மகா வித்தியாலயம், புனித செபஸ்தியன் பெண்கள் ஆரம்பப் பாடசாலை மற்றும் புனித செபஸ்தியன் ஆண்கள் ஆரம்பப் பாடசாலைகளைச் சேர்ந்த குறைந்தது 60 மாணவர்கள் கொழும்பு வடக்கு ராகம போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜா-எல பகுதியிலுள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், இலங்கை இராணுவத்தினர் மற்றும் பிரதேச வாசிகள் இணைந்து, பாதிக்கப்பட்ட மாணவர்களை உடனடி மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல உதவி செய்துள்ளனர்.

இரசாயனத் தொழிற்சாலை தீப்பற்றி எரிந்தமைக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை.

கம்பஹா மற்றும் கந்தானை தீயணைப்பு நிலையங்கள் மற்றும் வெலிசரவில் உள்ள இலங்கைக் கடற்படை முகாம் ஆகியவற்றின்

2➤

## மின்சாரத்தைக் கொள்வனவு செய்யாவிட்டால் மூன்று மணி நேர மின்வெட்டு அவசியமாகும்!

### அமைச்சர் கஞ்சன விஜேசேகர எச்சரிக்கை



உடவளவ நீர்த்தேக்கத்திற்கு நீர் வழங்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை அடுத்து, சமனலவெவ நீர் மின் நிலையத்தின் செயற்பாடுகள் ஒகஸ்ட் 16 ஆம் திகதியுடன் முற்றாக நிறுத்தப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர எச்சரித்துள்ளார்.

இன்று காலை நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் கஞ்சன, ஒகஸ்ட் 15 முதல் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்வதற்காக மின்சாரம் கொள்வனவு செய்யப்பட வேண்டும் என்று விளக்கினார்.

ஜூலை 30 ஆம் திகதி நீர்ப்பாசன அமைச்சு நீர்முகாமைத்துவ திணைக்களத்திடம் கேட்டுக்கொண்டமைக்கு இணங்க, நாம் அதிகளவு நீரை வழங்க நடவடிக்கை எடுத்திருந்தோம்.

ஒக்டோபர் 15 ஆம் திகதிவரை எந்தப் பிரச்சினையும் இல்லாமல் மின்சாரத்தை வழங்க இயலும். அதுவரையில் மின்சாரத்தைக் கொள்வனவு செய்ய வேண்டிய தேவையும் கிடையாது.

கடந்த மார்ச் மாதம் மின்சாரத்தை கொள்வனவு

2➤

## 13 இன் ஊடாக அதிகாரங்களைப் பகிர்ந்தால் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படுமென மிரட்டல்

### அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ குற்றச்சாட்டு

இனங்களுக்கு இடையில் முறுகலை ஏற்படுத்த நாடாளுமன்றுக்குள்ளும் பலர் முயற்சித்து வருவதாக நாடாளுமன்ற அமர்வில் கருத்துத் தெரிவித்த சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

நல்லிணக்கம் இல்லாத காரணத்தினால்தான் நாடு பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளது.

இதனால், ஜனாதிபதி சர்வகட்சி மாநாட்டுக்கு அழைப்பு விடுத்து, பிரச்சினைகளைத்

2➤



## பாதுகாப்புக்காக ஆயுதப்படையை அழைக்க ஜனாதிபதி உத்தரவு!

நாட்டின் பாதுகாப்புக்காக தேவைப்படும்போது ஆயுதப்படையினரை அழைப்பதற்கு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாற்பதாவது அதிகாரம் கொண்ட பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் பன்னிரண்டாவது பிரிவின்படி அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையிலிருந்து வெளிவரும் மாலைச் செய்தி இதழ்

# கிளிநொச்சி மாவட்டத்தின் கடல் எல்லைகளை வரையறுக்க நடவடிக்கை - சிறீதரன் எம்.பி உறுதி



கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டக் கடற் பரப்புகளில், மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் நலன்கருதி அந்தந்த மாவட்டங்களின் கடல் எல்லைகளை வரையறை செய்து, இரு மாவட்ட கடற்றொழிலாளர்களினதும் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பூநகரி பிரதேசத்தின் கௌதாரிமுனை, மண்ணித்தலை, விநாசியோடை உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களின் கோரிக்கைக்கு அமைவாக, அண்மையில் அப்பகுதிக்கு நேரடியாகச் சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், அப்பகுதி கடற்றொழிலாளர்களோடு கலந்துரையாடிய தன் அடிப்படையிலும், அவர்களோடு இணைந்து கௌதாரிமுனை தொடக்கம் கல்முனை வரையான கடற்பரப்பை படகுப்பயணம் மூலம் பார்வையிட்டதன் அடிப்படையிலும், அவர்களது கோரிக்கைகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (01)

# '13' விவகாரத்தில் காலைவாரும் மொட்டு! ரணிலுக்கு ஏற்பட்டுள்ள புதிய சிக்கல்

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்து வரும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்று மொட்டுக் கட்சிக்குள் அதிகமானவர்கள் முடிவெடுத்துள்ளார்கள் என்று அறிய முடிகின்றது.

பசில் ராஜபக்சவின் தலைமையில் மொட்டுக் கட்சி எம்.பிக்கள் - முக்கியஸ்தர்கள் கூடி, 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்தனர்.

அப்போது பல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ரணிலின் இந்தச் செயற்பாட்டில் உடன்பாடில்லை என்று கூறப்பட்டுள்ளதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

"13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்தும் மக்கள் ஆணை ஜனாதிபதிக்கு இல்லை. கோட்டாபயவின் மிகுதிக் காலத்தை நிறைவு செய்வ-தற்காகவே ரணில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். கோட்டாபயவின் தேர்தல் வாக்குறுதியில்கூட 13ஐ நடைமுறைப்படுத்துவதாகக் கூறப்படவில்லை. அப்படி இருக்கும்போது எப்படி ரணிலால் இதை நடைமுறைப் படுத்த முடியும்?" என்று அவர்கள் அங்கு கேள்வியை முப்பியுள்ளனர். ஆகவே, 13ஐ நடைமுறைப்படுத்துவதில் ஜனாதிபதி எதிர்காலத்தில் சிக்கலை எதிர்நோக்குவார் என்றே தெரிகின்றது. (03)

# சிவாஜிலிங்கம் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை உண்மைதான்!

## போட்டுடைத்தார் நிசாந்தன்




தமிழ்த்தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் பதவியில் இருந்து நீக்கப்பட்டது உண்மை!, எனத் தெரிவித்துள்ள கட்சியின் தேசிய அமைப்பாளர் சு.நிசாந்தன், இதனை கட்சியின் தலைவர் சிறிகாந்தாவும் சிவாஜிலிங்கமும் வெளிப்படையாக உளச்சான்றுடன் தெரிவிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் இன்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா பயணிப்பதற்கு முன்னதாக தமிழ்த் தேசியக் கட்சியினர்,13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கோரி இந்தியப் பிரதமருக்கு கடிதம் அனுப்பியிருந்தனர்.

அந்தச் சமயத்தில் இந்தியாவில் தங்கியிருந்த எம்.கே.சிவாஜிலிங்கம், அதற்கு முரணான முற்றிலும் நேர்மாறான கோரிக்கையை வலியுறுத்தி மோடிக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அவரது கடிதத்தில் சர்வஜன வாக்கெடுப்பை அவர் கோரியிருந்தார்.

இந்த நிலையில் கட்சியின் செயலாளர் பொறுப்பிலிருந்து எம்.கே.சிவாஜிலிங்கத்தை விலகுமாறு கட்சித் தலைமையால் கோரப்பட்டிருந்ததாகச் செய்திகள் வெளியாகியிருந்தன. ஆயினும், பின்னர் அது மறுக்கப்பட்டுமிருந்தது.

இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த கட்சியின் தலைமைக்குழு கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவின்படி எம்.கே.சிவாஜிலிங்கம் பதவி விலகுவதாக அறிவித்தார். இதனை ஏனைய தரப்பினரும் ஏற்றுக் கொண்டனர் என கட்சியின் தேசிய அமைப்பாளர் சு.நிசாந்தன் தெரிவித்துள்ளார். (க)

### 13 இன் ஊடாக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்க்க முயற்சி எடுத்து வருகிறார்.

ஆனால், இதற்குச் சிலர் முழுமையாக ஒத்துழைப்பு வழங்குவதில்லை. நாட்டில் 75 வருடங்களாக நீடிக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வினைக் காணாமல், அதிகாரத்தைக் கைப்பற்றவே இவர்கள் முயல்கிறார்கள். நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்தபோது கூட, நாடாளுமன்றில் ஒன்றாகச் செயற்பட முடியாத நிலைமைதான் காணப்படுகிறது.

இரண்டு இனங்களுக்கு இடையில் முறுகலை ஏற்படுத்த நாடாளுமன்றுக்குள்ளும் பலர் இன்று முயற்சித்து வருகிறார்கள். 13 இன் ஊடாக அதிகாரங்களை வழங்கினால், பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று கூறுகிறார்கள்.

ஆனால், காணி அதிகாரம் ஜனாதிபதியிடம் மட்டும் தான் உள்ளது. இதில் ஒரு பகுதி காணி அமைச்சுக்கும் இன்னொரு பகுதி காணி ஆணையாளர் நாயகத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கு அப்பால் நிர்வாக நடவடிக்கைகள் அனைத்தும், பிரதேச செயலகத்திற்குத்தான் உள்ளது.

எனவே, நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து நாட்டின் இறையாண்மைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்பட வேண்டும். 75 வருடங்களாகத் தோல்வியடைந்துவிட்டோம். அடுத்த 25 வருடங்களிலேனும் ஒன்றாகப் பயணித்து வெற்றி காண்போம், எனவும் அவர் தெரிவித்துள்ளார். (04)

### மின்சாரத்தைக் கொள்வனவு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யுமாறு மின்சார சபை கோரியது. ஆனால், நாம் மாற்று வழிகளைக் கையாளுமாறு வலியுறுத்தியிருந்தோம். அதற்கு இணங்க 10 மெகா வோட் டீசல் மின்பிறப்பாக்கியை மத்துகமவிலும், 30 மெகா வோட் மின் பிறப்பாக்கியை ஹம்பாந்தோட்டையிலும் பொருத்தி, தற்போது இயக்கிக் கொண்டிருக்கிறோம், என்று அவர் குறிப்பிட்டார்.

தற்போது இருக்கும் வறட்சி நிலைமையால் மின்சாரத்தைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டால் நாம் எவருக்கும் அஞ்சாமல் அதனை மேற்கொள்வோம். எவ்வாறாயினும், மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைக்கு அங்கீகாரம் வழங்கப்படாவிட்டால், மாத்தறை, காலி, இரத்தினபுரி மற்றும் ஹம்பாந்தோட்டை உள்ளிட்ட பல பகுதிகளில் மூன்று மணிநேர மின்வெட்டு அமுல்படுத்தப்படுமென அமைச்சர் விஜேசேகர எச்சரித்துள்ளார்.

இந்தப் பகுதிகளில் தினமும் மூன்று மணி நேர மின்வெட்டை, பகலில் ஒரு மணி நேரமாகவும் இரவில் இரண்டு மணி நேரமாகவும் அல்லது ஒரே நேரத்தில் மேற்கொள்ள நேரிடும் என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சமனலவெவ நீர்த்தேக்கத்திலிருந்து உடவளவைக்கு அதிகபட்ச நீரை விடுவிப்பதற்கான அமைச்சர் கஞ்சன விஜேசேகரவின் யோசனைக்கு நேற்று அமைச்சரவை பச்சைக்கொடி காட்டியதையடுத்து, சமனலவெவ நீர்த்தேக்கத்திலிருந்து உடவளவை நீர்த்தேக்கத்திற்கு விவசாய தேவைகளுக்காக நீர் விடுவதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இன்று ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி. சானக, மூன்று நாட்களுக்கு ஒரு முறை 3.5 மில்லியன் கனமீற்றர் வீதம் தண்ணீர் திறந்துவிடப்படும் என்று அறிவித்திருக்கிறார். (மி, 04)

### கந்தானை இரசாயனத் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீயணைப்பு வீரர்களின் இரண்டு மணி நேரக் கூட்டு முயற்சியின் பின்னரே தீயை அணைக்க முடிந்துள்ளது. (03, த)

### பிரித்தானியாவில் பரவும் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

வெளிநாடுகளில் ஏற்படும் புதிய நோய்த் தொற்றுகள் தொடர்பாக சுகாதார அமைச்சு எப்போதும் அவதானத்தோடு இருப்பதாக, இலங்கையின் கொவிட்-19 கட்டுப்பாட்டு இணைப்பாளரான மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்திருக்கிறார்.

பிரித்தானியாவில் பரவிவரும் திரிபு கவனத்துக்குரியதே. அது தொடர்பாக நாம் அவதானத்தோடும், தொடர்ச்சியாக கண்காணிப்பிலும் இருக்கிறோம், என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒமிக்ரோனின் அறிகுறிகள் போன்றே மூக்கில் நீர் வடிதல், தலைவலி, சோர்வு, தும்மல், தொண்டை வலி போன்றவற்றின் சற்று தீவிரமான நிலைகளே புதிய திரிபுக்குமான அடையாளங்களாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
- maalaikkathir@gmail.com

# கிளிநொச்சி மாவட்டத்தில் இன்று சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம்



கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஒன்று இன்றையதினம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் சிறுவர் விவகாரங்கள் தொடர்பான அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், தொண்டு நிறுவனங்கள், கிராம மட்ட அமைப்புகள் என பல தரப்பினரும் கலந்துகொண்டனர்.

வடக்கு மாகாண ஆளுநரின் வழிகாட்டலில் இணையத் தொடர்பாடல் மூலமாக சிறுவர்கள் தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டு, அது தொடர்பாகவும் கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளது. (த)

## ‘பொருண்மியம்’ வாரமலர் பிரதிகள் அட்டாளைச்சேனையில் கையளிப்பு







காலைக் கதிர், மாலைக்கதிர் பத்திரிகைகளை வெளியிட்டுவரும் பசுமை ஊடக இல்ல நிறுவனத்தினால் வெளியிடப்படும் ‘பொருண்மியம்’ வாரமலர் பிரதிகளை அட்டாளைச்சேனை உதவிப் பிரதேசச் செயலாளர் சட்டத்தரணி எப்.நஹிஜா முஸாபிர், ஊடகவியலாளரும் சமுர்த்தித் திட்ட முகாமையாளருமான எஸ்.எல்.அஸீஸ், அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.இஸட். அஸ்வர் ஆகியோருக்கு பிராந்திய செய்தியாளர் எம்.எப். நவாஸ் வழங்கிவைத்தார்.



## பவள விழாவுக்காக வரையப்பட்ட சுவர் ஓவியங்கள் திறந்து வைப்பு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை, ஒக்.08

கல்முனை கல்வி வலயத்திலுள்ள, கல்முனை அல்-பஹ்ரியா மகா வித்தியாலயத்தின் பவள விழாவை முன்னிட்டு அந்தப் பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் அனுசரணையில் பாடசாலையின் சுவர்களில் கடந்த இரண்டு மாதங்களாக வரையப்பட்ட ஓவியங்கள் இன்று வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டன.

பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம். பைசாலின் வழிகாட்டலில் இந்த ஓவியங்களை வரைவதற்குப் பொறுப்பான ஒருங்கிணைப்பாளர்களான எஸ். இஸட்.எம்.ஸ்னூஸ், பி.எம்.றுக்ஸான் மற்றும் ஏ.தாரிக் ஆகியோரின் ஏற்பாட்டில் ஓவியங்கள் வரையப்பட்டு, இன்று பார்வையாளர்களுக்குக் காட்சிப்படுத்தப்பட்டன.

இந்த நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர் எம்.ஏ.ஸலாம், ஒழுக்காற்றுக் குழுத் தலைவர் ஆசிரியர் எம்.பி.எம். லாபீர், விளையாட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் ஆசிரியர் யூ.எல்.எம்.றியால், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் எஸ்.எல்.ஏ.ஹமீட், பழைய மாணவர் சங்கச் செயலாளர் எம்.ஐ.எம்.ஜிப்ரி, அக்ஸான் இன்ஜினியரிங் வேக்ஸின் பணிப்பாளர் கே.எல்.எம்.அர்ஸாத், பழைய மாணவர்கள் சார்பாக எஸ்.என்.ஹஸ்மி, எஸ்.எல்.தன்சில், யூ.கே.லாபிர், எஸ்.எம்.ஹர்னி உட்பட நலன் விரும்பிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# பங்களாதேஷில் அதிகரித்த டெங்கு நோய்த் தாக்கத்தால் 303 பேர் பலி!



மழைக்காலத்தில் நுளம்புகளால் அதிகளவு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகும் நாடாக பங்களாதேஷ் காணப்படுகின்றது.

பங்களாதேஷில் கடந்த ஜூன் மாதம் அதிகளவு மழைவீழ்ச்சி பதிவானதால், பங்களாதேஷ் முழுவதும் டெங்குக் காய்ச்சல் மிக வேகமாகப் பரவி வருகின்றது.

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் பங்களாதேஷில் 64,000 த்திற்கும் மேற்பட்டோர் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 303 பேர் உயிரிழந்துள்ளதாகவும் பங்களாதேஷ் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சனிக்கிழமை மாத்திரம் 2,000 த்துக்கும் மேற்பட்டோர் டெங்குவால் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டின் சுகாதார அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் பலர் சிகிச்சை பெற்று வரும் நிலையில், நோயின் தாக்கம் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர். (மி)



# சிரியா மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்

சிரியாவில் 2011 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் இடம்பெற்று வருகின்றது.

சிரிய ஜனாதிபதி பஷீர் அல் அசாத் தலைமையிலான அரச படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நடைபெறும் இந்த மோதலில் ஜனாதிபதி அசாத்திற்கு ஈரான் ஆதரவு வழங்கி வருகிறது.

ஈரான் ஆதரவுக் குழுவினர் சிரியாவில் குவிக்கப்பட்டுள்ளனர். இந்தக் குழுவினர் சிரியா -இஸ்ரேல் எல்லையோரம் இருந்தவாறு இஸ்ரேல் மீதும் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்தத் தாக்குதலைத் தடுக்க சிரியா மீது இஸ்ரேல் அவ்வப்போது பதில் தாக்குதலை மேற்கொண்டு வருகிறது. சிரியாவின் எல்லைக்குள் புகுந்து இஸ்ரேல் வான்வழித் தாக்குதலையும் நடத்தி வருகிறது.

இந்த நிலையில், சிரியாவின் தலைநகர் டமஸ்கஸ் மீது இஸ்ரேல் இன்று அதிகாலை வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதலில், சிரியாவின் பாதுகாப்புப் படையினர் நால்வர் உயிரிழந்து, 4 பேர் படுகாயமடைந்துமுள்ளனர்.

இதையடுத்து இரு நாடுகளுக்கும் இடையே பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. (கோ)

# தென் சீனக்கடலில் சீனாவின் அதிகாரம் எதிர்ப்பைத் தெரிவித்தது பிலிப்பைன்ஸ்

தென் சீனக்கடல், உலகின் பரபரப்பான கடல் பாதைகளில் ஒன்றாக விளங்குகிறது.

இங்கு சீனா, பிலிப்பைன்ஸ், வியட்நாம், மலேசியா, தாய்வான் மற்றும் புருனே ஆகிய நாடுகளிடையே அவ்வப்போது மோதல் ஏற்படுகிறது.

பிலிப்பைன்ஸின் கட்டுப்பாட்டிலே, சர்ச்சைக்குரிய இந்தக் கடற்பகுதியில் அமைந்துள்ள தாமஸ் ஷோல் தீவு உள்ளது.

இங்கு உணவு, நீர் மற்றும் எரிபொருள் போன்றவற்றை வழங்குவதற்காக பிலிப்பைன்ஸ் படகு சென்றபோது, அந்தப் படகை சீன இராணுவக் கடலோரப் பாதுகாப்புப் படைக் கப்பல் சேதப்படுத்தியதாகக் கூறப்படுகிறது.




சீனாவின் இந்த நடவடிக்கைக்கு அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளன.

தென் சீனக்கடல் குறித்த ஒப்பந்தத்தை அமெரிக்கா புதுப்பித்துள்ள நிலையில், அதன்படி பிலிப்பைன்ஸ் மற்றும் தென் சீனக்கடலில் தாக்குதல் நடத்தினால் நட்பு நாடுகளை அமெரிக்கா பாதுகாக்க வேண்டும். ஆனால், ஆசிய விவகாரங்களில் தலையிடுவதை நிறுத்துமாறு அமெரிக்காவை சீனா எச்சரித்துள்ளது.

இந்த நிலையில், சீனத் தூதர் ஹவாங் சிலியனை அழைத்து தூதரக ரீதியிலான தனது எதிர்ப்பை பிலிப்பைன்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (கோ)

# தமிழ்நாட்டு மீனவர்களை விடுவிக்கக்கோரி மத்திய அரசுக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டு மீனவர்களை உடனடியாக மீட்டு அழைத்துவரத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்தி, இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

பாரம்பரிய மீன்பிடி பகுதியில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுவது மிகுந்த கவலையளிக்கிறது. IND-TN-06-MM-948 என்ற பதிவு எண்ணைக் கொண்ட படகில் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 10 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சமீபத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டு மட்டும் இதுவரை 93 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டு, 14 படகுகள் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளன. கடந்த 30 நாட்களில் 3 வெவ்வேறு சம்பவங்களில் 34 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகள், பல தலைமுறையாக மீனவர்கள் மற்றும் அவர் தம் குடும்பத்தினரின் தேவையைப் பூர்த்தி செய்வதோடு அவர்களுக்கான வாழ்வாதாரத்தையும் வழங்கி வருகின்றன. இலங்கைக் கடற்படையினரால் மீனவர்கள் அடிக்கடி கைது செய்யப்படுவதும் அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் மீனவ மக்களுக்குப் பெரும் துன்



பத்தையும் துயரத்தையும் அளிக்கிறது.

இலங்கைச் சிறையில் வாடும் 19 மீனவர்களை உடனடியாக விடுதலை செய்து, அவர்களை தாயகம் அழைத்து வரத் தேவையான தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பல்லாயிரக்கணக்கான மீனவக் குடும்பங்களைப் பாதிக்கும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வினைக் காணவேண்டும், என தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் தனதுகடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சரின் தலையீடும் ஆதரவும் இந்தப் பிரச்சினையை விரைவாகத் தீர்த்து, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் பெரும் நிம்மதியைத் தரும் என அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (கோ)



# தீயணைப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இரு ஹெலிகொப்டர்கள் மோதி விபத்து

அமெரிக்காவில் தீயணைப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஹெலிகொப்டர்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கலிபோர்னியாவில் உள்ள ரிவர்சைட் கவுண்ட்டியில் ஏற்பட்ட தீயை அணைக்கும் பணியில் இரண்டு ஹெலிகொப்டர்கள் ஈடுபட்டிருந்தபோது, அவையிரண்டும் நேருக்கு நேர் மோதியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துக்குள்ளான ஹெலிகொப்டர்களில் ஒன்று தரையிறக்கப்பட்ட நிலையில், மற்றொன்று மலைப் பகுதியில் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் அதில் இருந்த மூவரும் உயிரிழந்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மி)

# மொட்டு எம்.பிக்களையும் சேர்த்து ‘மெகா’ கூட்டணிக்குச் சஜித் தயார்

மொட்டுவில் அதிருப்தியடைந்த எம்.பிக்களையும் இணைத்துக்கொண்டு விரைவில் பாரிய கூட்டணி ஒன்றை அமைப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பாக தெற்கு ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில், ஒரு சில நாட்களுக்கு முன் மொட்டுக் கட்சியின் முக்கிய எம்.பி. ஒருவர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரே மதாசவுக்கு தொலைபேசி அழைப்பை எடுத்துள்ளார்.



அவ்வாறு அவர் தொலைபேசி அழைப்பு எடுத்ததன் நோக்கம், அவருடன் சேர்ந்து 15 எம்.பிக்கள் அரசுடன் அதிருப்தியடைந்திருப்பதாகவும், எதிர்க்கட்சியில் இணைவதற்குத் தயாராக இருப்பதாகவும் சஜித்திடம் தகவல் சொல்லியிருக்கிறார்.

“சேர்... உங்களது கட்சியில் இணைய முடியுமா...?” என்று சஜித்திடம் அவர் கேட்டுள்ளார் எனவும், “முடியும். விரைவில் பாரிய கூட்டணி ஒன்றை அமைக்கப் போகின்றோம். அதில் இணையுங்கள். ஏற்கனவே மொட்டில் இருந்து விலகிய 13 எம்பிக்கள் சுயாதீனமாக இயங்குவதோடு எம்மோடும் சேர்ந்து செயற்படுகின்றார்கள். அவ்வாறு நீங்களும் செயற்பட முடியும்” - என்று சஜித் பதிலளித்துள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (O3)

## கல்வி இராஜாங்க அமைச்சரின் மகனுக்கு கிளிநொச்சியில் அமோகமான வரவேற்பு



கல்வி ராஜாங்க அமைச்சின் பிரத்தியேகச் செயலாளர் என தன்னை அடையாளப்படுத்தியவாறு, கல்வி ராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமாரின் மகன் இன்று அதிகாரிகளுடனான சந்திப்பில் ஈடுபட்டமை சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

கிளிநொச்சி தெற்கு வலயக்கல்வி பணிமனையில் வலயக்கல்விப் பணிப்பாளர் தலைமையில் குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பில் ராஜாங்க அமைச்சரின் மகனுக்கு மாலை அணிவித்து அமோக வரவேற்பளிக்கப்பட்டுள்ளதாகவும், வலயத்தில் உள்ள குறைபாடுகள் தொடர்பாக அவருக்கு விவரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல்வாதிகளின் வாரிசுகளுக்கும் மதிப்பளிக்கும் அளவிற்கு கல்வி அதிகாரிகளின் நிலைமை சென்றுள்ளமை தொடர்பில் பலரும் அதிருப்தி வெளியிட்டுள்ளதாக எமது செய்தியாளர் குறிப்பிடுகிறார்.

கல்வித் தேவைகள், குறைபாடுகள் தொடர்பாக அறிய விரும்பின் அமைச்சர் நேரடியாகவோ அல்லது அறிக்கை மூலமாகவோ பெற்றுக்கொள்ளமுடியும். அதனைத் தவிர்த்து, தனது வாரிசை அனுப்பி இவ்வாறு நடந்துகொண்டதும், அதற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் அமைச்சருக்கு நிகரான மரியாதையை வழங்கும் செயற்பாடுகளை முன்னெடுத்ததும் ஒட்டுமொத்த கல்வி சமூகத்தை தலைகுனிய செய்துள்ளதாகவும், இதனை முன்னுதாரணமாகக் கொண்டு அரசியல்வாதிகளின் வாரிசுகள் ஒவ்வொருவரும் இவ்வாறு நடந்து கொள்ள முனைவார்கள் எனவும் அவர்கள் விமர்சிப்பதாகவும் எமது செய்தியாளர் தெரிவித்தார். (O2)

## இலங்கை வம்சாவளி இளைஞர் அவுஸ்திரேலியாவில் மாயம்!

அவுஸ்திரேலியாவில் இலங்கை வம்சாவளி இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. காணாமல்போனவர் 18 வயதுடைய திஷாந்தன் என்ற பெயரையுடையவர் எனவும் கூறப்படுகின்றது.

குறித்த இளைஞர் கடந்த நான்காம் திகதி வெள்ளிக்கிழமை முதல் காணாமல் போயுள்ளதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அவர் மெல்பேர்னில் உள்ள பீக்கன்ஸ்பீல்ட் பகுதியில் வைத்தே காணாமல் போனதாகவும், அவர் கடைசியாக கார் ஒன்றில் பயணித்தது தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள் ளன. இளைஞர் மாயமானமை குறித்து விக்டோரியா பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (கோ)

## காசோலை மோசடி செய்து வாகனம் கொள்வனவு தலைமறைவானவரைத் தேடிப்பிடித்த பொலிஸார்

மோசடியான காசோலையைக் கொடுத்து வாகனமொன்றைக் கொள்வனவு செய்துவிட்டுத் தலைமறைவான சந்தேகநபரை பொலிஸார் நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.

இளவாலையைச் சேர்ந்தவரிடம் ஓராண்டுக்கு முன்னர் 62 லட்சம் ரூபாவுக்கு வாகனமொன்றை ஒருவர் வாங்கியுள்ளார். அதற்குரிய காசோலையை வழங்கியபோது, வங்கியில் பணம் இல்லாமையால் அது திரும்பியுள்ளது.

வாகனத்துக்குரிய பணத்தைக் கேட்டபோது விரைவில் அதனைத் தருவதாகக் கூறி ஏமாற்றிவிட்டு, வாகனத்துடன் சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார்.

இந்த நிலையில் 6 மாதங்களுக்கு முன்னர் மாவிட்டபுரத்தில் மேற்படி வாகனம் மின்னொழுக்குக் காரணமாக எரிந்துபோயுள்ளது. இதனால், வாகனத்தோடு தலைமறைவானவர் பற்றிய அண்மைய விவரங்கள் வெளியாகின.

வாகனத்தை வாங்கியவர் நீண்ட காலமாக ஏமாற்றி, தலைமறைவாகியதையடுத்து வாகனத்தை விற்றவர் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்ட விசேட குற்றவிசாரணைப் பிரி வில் முறைப்பாடு செய்திருந்தார். விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சந்தேக நபரைக் கைதுசெய்து, யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர். இதன்போது அவருக்கு 14 நாள் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



## சைபீரியாவின் பனி மூடிய வனப்பகுதியில் 46,000 ஆண்டுகள் பழமையான புழு இனம்

சைபீரியாவில் பனி மூடிய வனப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், 46,000 ஆண்டுகள் பழமையான புழு இனத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த உறங்கும் நிலைப் புழுக்களுக்கு விஞ்ஞானிகளால் தண்ணீரும் உணவும் வழங்கப்பட்டன. அதன் பிறகு அவை உறக்கநிலையிலிருந்து வெளியே வந்து விழித்திருந்தன.

விஞ்ஞானிகளின் கூற்றுப்படி, இந்த புழு ப்ளீஸ்டோசீன் சகாப்தத்தின் கடைசிப் பாதியில் இருந்த ஒரு உயிரினமாகும். யானைகளைப் போன்ற கம்பளி மாமத்கள் இந்தக் காலத்தில் வாழ்ந்தன.

இந்தப் புழுக்களுக்கு விஞ்ஞானிகள், காலத்தைக் கடந்து செல்லக்கூடிய அற்புதமான புழுக்கள் என்று பெயரிட்டுள்ளனர். (மி)



## மத்திய வங்கி வளாகத்திற்குள் அத்துமீறி நுழைந்தவர்கள் கைது

இன்று காலை மத்திய வங்கி வளாகத்திற்குள் அத்துமீறி நுழைந்த 9 பேரை கொழும்பு கோட்டை பொலிஸ் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒரு பெண்ணும் 8 ஆண்களும் அடங்குவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குத்தகை மற்றும் கடன் தவணை செலுத்துவோரின் கூட்டுச் சங்கத்தின் உறுப்பினர்கள் குழுவொன்று மத்திய வங்கி வளாகத்துக்குள் நுழைந்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதால் அப்பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டிருந்தது. (மி)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.08.2023இல் வெளியிடப்பெற்றது.